முருகப்பெருமான் துணை

**மகான் மாலாங்கன் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

08.01.2023, ஞாயிற்றுக்கிழமை

1. ஞான வள்ளலே வாழும் ஞானியே
   நம்பிக்கையூட்டி உலகமக்களை
   ஞானவான்களாக மாற்றவந்த
   ஞானியே ஆறுமுக அரங்கனே
2. அரங்கனே உன் பெருமை கூறி
   அகிலமதில் சுபகிருது சிலை திங்கள்
   அறுநான்கு திகதி கதிரோன் வாரம்
   (சுபகிருது வருடம் மார்கழி மாதம் 24 ம் நாள் 08.01.2023, ஞாயிற்றுக்கிழமை)
   அறிவிப்பேன் அனுகூல ஆசிதனை
3. ஆசிதனை மாலாங்கன் யானும்
   அரங்கன் கேட்க அருளுவேன்
   வாசிவென்ற மகா சக்திகள்
   வலம்வந்து உலகை காத்திட
4. காத்திட அரங்கன் செய்திடும்
   கருணை மிகுந்த தருமவழியே
   உத்தமமென வணங்கி ஏற்று
   உள்இருந்து அருள்புரிய
5. அருள்மிக்க அரங்கன்நிழலை
   அனுகி அடைந்து சரணாகதி
   இருள்விலக மக்கள் கொண்டிட
   இவ்வுலகில் பெரும் பாதுகாப்பு மாறி
6. மாறியே இயல்பாக சித்திகள்
   மகான் அரங்கன் அனுகூலமாக
   பேருலகமே கண்டு தேறும்
   பிரளயம் பேரிடர் அனுகாத வண்ணம்
7. வண்ணமுடன் சகல பாதுகாப்பும்
   வையகம் கண்டு உயரும்
   எண்ணமும் சர்வ செயலுமாக
   இறங்கி ஞானியர்கள் ஆசிதர
8. ஆசிவழி இந்த உலகினில்
   அற்புதம் மிகுதி காணும்
   வாசிவசம் பிறவாப் பேறு
   வையகத்தில் பலருக்கும் கிட்டி
9. கிட்டி முருகப்பெருமான் தயவு
   குறைவிலா பலரும் கண்டு
   கட்டமிலா மாற்றம் கூடி
   கவலையிலா நற்கடமை சேவை

10. சேவை ஆற்றி உலக மக்கள்
சேவகர்களாக ஞானவான்கள் ஆக
அவனியில் அரங்கனால் தேறுவர்
அகிலத்தையே மாற்றும் மகா

11. மகா சக்திகளாக உருவெடுத்து
மண்ணுலகை ஞானவழியில்
வகைபட காப்பர் ஆள்வர்
வழங்கிய அனுகூல ஆசி முற்றே

—சுபம்—